குஜராத்தில் ஆம் ஆத்மிக்கு ஓரிடம்கூட கிடைக்காது

அமித் ஷா

அகமதாபாத், நவ. 30: குஜராத் பேரவைத் தேர்தலில், ஆம் ஆத்மி கட்சி ஒரு தொகுதியில்கூட வெற்றி பெற வாய்ப்பில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

மேலும், குஜராத்தில் அடிப்படைவாத அமைப்புகளுக்கு எதிரான சிறப்புப் பிரிவு உருவாக்கப்படும் என்ற பாஜகவின் வாக்குறுதியை குறிப்பிட்டு பேசிய அவர், அது நல்ல நடவடிக்கை என்றும், மத்திய அரசு மற்றும் இதர மாநிலங்களும்கூட அதை செயல்படுத்த முடியும் எனவும் கூறினார்.

182 உறுப்பினர்களைக் கொண்ட குஜராத் பேரவைக்கு இரு கட்டங்களாக தேர்தல் நடத்தப்படுகிறது. முதல்கட்டமாக 89 தொகுதிகளில் வியாழக்கிழமை வாக்குப் பதிவு நடைபெறுகிறது. ஆளும் பாஜக, எதிர்க்கட்சியான காங்கிரஸ் ஆகியவற்றுடன் இம்முறை ஆம் ஆத்மியும் மோதுவதால் மும்முனைப் போட்டி நிலவுகிறது. 'பாஜகவுக்கு முக்கிய போட்டியாளர் ஆம் ஆத்மிதான்' என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் அரவிந்த் கேஜரிவால் கூறி வருகிறார்.

இந்நிலையில், பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அமித் ஷா அளித்த பேட்டியில், ஆம் ஆத்மியின் வரவு குறித்த கேள்வி முன்வைக்கப்பட்டது. அதற்கு, 'தேர்தலில் போட்டியிட ஒவ்வொரு கட்சிக்கும் உரிமை உள்ளது. ஆனால், அந்தக் கட்சியை ஏற்பதும் ஏற்காததும் மக்கள் கையில் இருக்கிறது. குஜராத் மக்கள் மனதில் ஆம் ஆத்மி இல்லை. தேர்தல் முடிவுகள் வரட்டும். வெற்றி வேட்பாளர்கள் பட்டியலில் ஆம் ஆத்மிக்கு இடமில்லாமல் போகலாம்' என்றார் அமித் ஷா.

'நெருக்கடியில் காங்கிரஸ்': காங்கிரஸ் குறித்த கேள்விக்கு, 'பிரதான எதிர்க்கட்சியாக இருந்தபோதிலும், தற்போது நெருக்கடியில் காங்கிரஸ் இருக்கிறது. அதன் தாக்கம் குஜராத் தேர்தலில் கண்கூடாகத் தெரியும்' என்றார் அமித் ஷா.

ராகுல் காந்தியின் நடைப்பயணம் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், 'அரசியல்வாதிகள் கடுமையாக பணியாற்ற வேண்டுமென்ற கருத்து எப்போதுமே எனக்கு உண்டு. யாரேனும் கடுமையாகப் பணியாற்றினால் அது நல்லதுதான். ஆனால், அரசியலில் நிலையான முயற்சிகளே பலன் தரும். எனவே, பொறுத்திருந்து பார்ப்போம்' என்றார்.



குஜராத்தில் இரண்டாம் கட்ட தேர்தலையொட்டி அகமதாபாதில் புதன்கிழமை வாகன பிரசாரத்தில் ஈடுபட்ட மத்திய அமைச்சர் அமித் ஷா.

'பாஜகவுக்கு இதுவரை இல்லாத வெற்றி': 'குஜராத்தில் தொடர்ந்து 27 ஆண்டுகளாக பாஜக மீது மக்கள் நம்பிக்கை வைத்து வந்துள்ளனர். இதற்கு பிரதமர் நரேந்திர மோடியின் செல்வாக்கு, அவர் முதல்வராக இருந்தபோது குஜராத் அடைந்த வளர்ச்சி, பாரபட்சமற்ற கொள்கைகள் அமலாக்கம் ஆகியவைதான் முக்கிய காரணங்களாகும். பாஜக மற்றும் பிரதமர் மோடி மீது குஜராத் மக்களின் நம்பிக்கை துளியும் குறைவுபடவில்லை. எனவே, இதுவரை இல்லாத வெற்றியை இத்தேர்தலில் பாஜக பெறும்' என்றார் அமித் ஷா.

எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுக்கு பதில்: குஜராத் பேரவைத் தேர்தலில் பயங்கரவாதம் உள்ளிட்ட தேசிய பாதுகாப்பு விவகாரங்களை முன்வைத்தே பாஜக பிரசாரம் செய்கிறது; இது நிர்வாகரீதியிலான குறைபாடுகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்பும் செயல் என்று எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு, 'எல்லை மாநிலமான குஜராத்தின் பாதுகாப்பு தேசிய பாதுகாப்பில் இருந்து வேறுபட்டது அல்ல. தேசம் பாதுகாப்பாக இல்லாவிட்டால் குஜராத் எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும்? தேசிய பாதுகாப்பு என்பது அனைத்து மாநில பேரவைத் தேர்தல்களிலுமே முக்கியமாக பேசப்பட வேண்டியது' என்றார்.

'தமிழகத்தில் சிறப்பாக செயல்படுகிறது பாஜக': தெற்கு, கிழக்கு மாநிலங்களில் பாஜகவின் வளர்ச்சி குறித்த கேள்விக்கு பதிலளித்து, அவர் கூறியதாவது:

மேற்கு வங்கத்தில் கடந்த மக்களவைத் தேர்தலில் 18 இடங்களில் பாஜக வெற்றி பெற்றது. அடுத்த தேர்தலில் மேலும் அதிக தொகுதிகள் கிடைக்கும். தெலங்கானாவில் முக்கிய எதிர்க்கட்சியாக பாஜக உருவெடுத்துள்ளது. தமிழகம், ஆந்திரத்திலும் பாஜக சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தொண்டர்கள் அடிப்படையிலான ஒரு கட்சியின் வளர்ச்சி என்பது ஒரே இரவில் நடந்துவிடாது. அது நேரம் எடுக்கும். எனினும் மேற்கண்ட மாநிலங்களில் நாங்கள் சிறப்பாகவே செயல்பட்டு வருகிறோம் என்றார் அமித் ஷா.

அடுத்த மக்களவைத் தேர்தலில் பாஜகவுக்கு எதிராக ஒருங்கிணைந்த கூட்டணியை உருவாக்க பிராந்திய கட்சிகள் முயன்று வருவது குறித்த கேள்விக்கு, 'பிரதமர் மோடி மற்றும் அவரது ஆட்சியின் புகழுக்கு முன் அதுபோன்ற எந்த கூட்டணியும் எடுபடாது' என்று அமித் ஷா பதிலளித்தார்.

தாய்மொழியில் மருத்துவ, தொழில்நுட்ப, சட்டக் கல்வி

'ஆங்கிலம் பேசாத மாணவர்களின் திறனை பயன்படுத்தும் வகையில், தாய்மொழியில் தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் சட்டக் கல்வி வழங்கப்படுவதை ஊக்குவிக்க வேண்டும்' என்று அனைத்து மாநிலங்களுக்கும் அமித் ஷா வலியுறுத்தினார்.

இதுதொடர்பாக, செய்தியாளரிடம் அவர் கூறுகையில், 'ஹிந்தி அல்லது பிராந்திய மொழிகளில் மேற்கண்ட படிப்புகளை மாணவர்கள் பயிலும்போது, எளிதாகவும் விரைவாகவும் புரிந்து கொள்ள முடியும். இது, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களுக்கு வழிவகுக்கும். எனவே, தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் சட்டக் கல்வி பாடத்திட்டங்களை பிராந்திய மொழிகளில் முறையாக மொழிபெயர்க்க அனைத்து மாநில அரசுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேசத்தில் ஆங்கிலவழிக் கல்வி பின்னணியில் இருந்து வந்த 5 சதவீதம் பேரின் திறனை மட்டுமே இப்போது பயன்படுத்தும் நிலை இருக்கிறது. ஆனால், தாய்மொழி வழி கல்வி மூலம் 100 சதவீத திறமையையும் நாம் பயன்படுத்த முடியும்' என்றார்.

பிஎஸ்-4 வாகனங்கள் முறைகேட்டில் ஆந்திர முன்னாள் எம்எல்ஏவின் சொத்துகள் முடக்கம்

அசோக் லேலண்ட் பங்கு தொடர்பாக விசாரணை

புது தில்லி, நவ. 30: பிஎஸ்-4 வாகனங்கள் முறைகேட்டில் ஆந்திர முன்னாள் எம்எல்ஏ பிரபாகர் ரெட்டியின் ரூ.22 கோடி மதிப்பிலான சொத்துகளை முடக்கியுள்ள அமலாக்கத் துறை, அந்த முறைகேட்டில் அசோக் லேலண்ட் நிறுவனத்தின் பங்கு தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக அமலாக்கத் துறை புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: நாட்டில் பிஎஸ்-4 மாசு தரக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுடன் ஒத்துப்போகாத வாகனங்களை விற்பனை செய்யக் கூடாது என்று கடந்த 2017-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த ஆண்டு ஏப்ரல் 1-ஆம் தேதிமுதல், அந்த வாகனங்களின் பதிவுக்குத் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆந்திர முன்னாள் எம்எல்ஏ ஜே.சி.பிரபாகர் ரெட்டிக்கு சொந்தமான ஜடாதரா நிறுவனம், பிரபாகர் ரெட்டியின் நெருங்கிய கூட்டாளியாகக் கருதப்படும் ஒப்பந்ததாரர் கோபால் ரெட்டி மற்றும் பலர் சேர்ந்து பிஎஸ்-3 விதிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட வாகனங்களை வாங்கியுள்ளனர். அந்த வாகனங்கள் அசோக் லேலண்ட் வாகனத் தயாரிப்பு நிறுவனத்திடம் இருந்து சலுகை விலையில் வாங்கப்பட்டுள்ளன. பின்னர், அந்த வாகனங்கள் போலி ரசீதுகள் மூலம் பிஎஸ்-4 விதிமுறைகளின்படி தயாரிக்கப்பட்ட வாகனங்கள் என்று மோசடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக விசாரித்தபோது அந்த வாகனங்களின் சில பதிவுகள் நாகாலாந்து, கர்நாடகம் மற்றும் ஆந்திரத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, நாகாலாந்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலக அதிகாரிகள் மூலம் போலி ரசீதுகளும், அசோக லேலண்ட் அளித்த அசல் ரசீதுகளும் சான்றாகத் திரட்டப்பட்டு குற்றம் உறுதி செய்யப்பட்டது. பிஎஸ்-3 வாகனங்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ.38.36 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பிரபாகர் ரெட்டி, அவரின் குடும்பத்தினர் மற்றும் நிறுவனங்களுக்குச் சொந்தமான ரூ.22.10 கோடி மதிப்பிலான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

இந்த முறைகேட்டில் அசோக் லேலண்டின் பங்கு என்னவென்பதையும் சேர்த்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசோக் லேலண்ட் விளக்கம்: இந்த விவகாரம் குறித்து அசோக் லேலண்ட் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், 'வாகன விற்பனை முறைகேடு தொடர்பான விசாரணை வாடிக்கையாளருக்கு எதிரானது தானே தவிர, அசோக் லேலண்டுக்கு எதிரானது அல்ல. இந்த விவகாரம் தொடர்பான அனைத்து விவரங்கள் மற்றும் ஆவணங்கள் அமலாக்கத் துறையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இது அசோக் லேலண்டுக்கு முறைகேட்டில் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை எடுத்துரைக்கிறது.

அனைத்து மாசு தரக் கட்டுப்பாடுகளுக்கும் இணங்கி அசோக் லேலண்ட் செயல்பட்டு வருகிறது' என்று தெரிவித்துள்ளார்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
சுங்குவார்சத்திரம் கிளை

158/144, சென்னை - பெங்களூர் நெடுஞ்சாலை, சுங்குவார்சத்திரம் - 602106
தொலைபேசி : 044-27165050 மின்னஞ்சல் : iob2667@iob.in

சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைகாப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு செயலாக்க) விதிகள் 2002ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன்படி **30.06.2022** தேதிப்படி கடன்பாக்கி தொகையான **ரூ.18,14,265/-** (ரூபாய் பதினெட்டு லட்சத்து பதினான்காயிரத்து இருநூற்று அறுபத்து ஐந்து மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர் M/s. ஓம் கணபதி டிரேடர்ஸ்,** உரிமையாளர் **D. கன்னியப்பன்,** வாலாஜாபாத் மெயின் ரோடு, இந்தியன் வங்கி அருகில், சுங்குவார்சத்திரம், காஞ்சிபுரம் மாவட்டம் - 602106 மற்றும் **D. கன்னியப்பன்,** எண்.510, பிள்ளையார் கோயில் தெரு, சித்தூர் கிராமம், சந்தவேலூர் அஞ்சல், சுங்குவார்சத்திரம், காஞ்சிபுரம் மாவட்டம் - 602106 **(இனி இவர்கள் கடன்தாரர்கள் என அழைக்கப்படுவர்)** என்ற விலாசத்திற்கு **14.07.2022** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்டது.

(1) கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை முழுவதையும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின் படியும், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை **29.11.2022** தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடைமையாக்கியுள்ளார்.

(2) இது முதற்கொண்டு கடன்தாரர்களோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு **30.06.2022** தேதிப்படி வந்து சேரவேண்டிய கடன் தொகையான **ரூ.18,14,265/-** (ரூபாய் பதினெட்டு லட்சத்து பதினான்காயிரத்து இருநூற்று அறுபத்து ஐந்து மட்டும்) திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புகொள்ளப்பட்டபடி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன் மூலம் தெரியப்படுத்துகிறோம்.

(3) சொத்து சுவாதீனம் எடுத்துக்கொள்ளும்போது செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை **ரூ.18,54,356/-** (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து முந்நூற்று ஐம்பத்து ஆறு மட்டும்) வட்டி, கட்டணங்கள் மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து, தொகை கட்டும் வரை செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

(4) கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

அசையா சொத்து விபரம்

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, சித்தூர் கிராமம், பழைய சர்வே எண்.531 (பகுதி) புதிய சர்வே எண்.661/7, கதவு எண்.651, பிள்ளையார் கோயில் தெருவில் 1105 சதுர அடி கட்டடத்துடன் கூடிய நிலம் அதன் துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: **வடக்கு :** தெரு, **தெற்கு :** திரு. பழனிக்குச் சொந்தமான காலிமனை மற்றும் வீடு, **கிழக்கு :** திரு. பெருமாளுக்குச் சொந்தமான காலிமனை மற்றும் வீடு, **மேற்கு :** திரு. பொன்னனுக்குச் சொந்தமான காலிமனை மற்றும் வீடு.

இடம் : சுங்குவார்சத்திரம்
தேதி : 29.11.2022

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

திருத்தணி II கிளை (DP 16102)
எண்.113, MPS சாலை, திருத்தணி-631 209
Ph: 044-2788 5388 / 094422 03646
Email: cb16102@canarabank.com

Canara Bank கனரா வங்கி
Syndicate சிண்டிகேட்

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு ANNEXURE – 10 [SECTION 13(4)]

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) (Act 54 of 2002) (hereinafter referred to as "the Act") மற்றும் விதி 3ன்படி (Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் **கனரா வங்கியின் அதிகாரம் பெற்ற அதிகாரியாக** நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டத்தின் 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன் கீழ் **கடன்தாரர்: 1.Mr.K.தினகரன்** S/o.கிருஷ்ணன், **ஜாமீன்தாரர்: 2.Mrs.D.மோகனா,** W/o.தினகரன், **இருவரது முகவரி:** எண்.10 Dr. ராதா கிருஷ்ணன் சாலை, திருத்தணி டவுன், திருவள்ளூர்-631209 ஆகியோர் **31.12.2021** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட கடன்தொகையான 31.12.2021 அன்றுள்ளபடி ரூ.**47,84,340.56** (ரூபாய் நாற்பத்து ஏழு லட்சத்து எண்பத்து நான்காயிரத்து முந்நூற்று நாற்பது மற்றும் பைசா ஐம்பத்து ஆறு மட்டும்) மற்றும் வட்டியை சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன்தாரர் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8 & 9-ன் படி **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 29.11.2022 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக உடைமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரர் அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது கனரா வங்கி, திருத்தணி II கிளைக்கு வர வேண்டிய கடன் தொகையான 31.10.2022** அன்றுள்ளபடி ரூ.**52,94,281.26** (ரூபாய் ஐம்பத்து இரண்டு லட்சத்து தொண்ணூற்று நான்காயிரத்து இருநூற்று எண்பத்து ஒன்று மற்றும் பைசா இருபத்து ஆறு மட்டும்) மற்றும் **வட்டிக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.**

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்து விவரம்

சொத்தின் உரிமையாளர் Mr.K.தினகரன். காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருத்தணி சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.102/2,3 சப்டிவிஷன் புதிய சர்வே எண்.102/4A2, பட்டா எண்.2890, **மனை எண்.2,4,5 & 6, திருத்தணி, திருத்தணி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் என்னும் முகவரியில் 5067 அடி காலி மனை** மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும்

	மனை எண்.2	மனை எண்.4	மனை எண்.5	மனை எண்.6
வடக்கு	சர்வே எண்.102/3-ல் உள்ள நிலம்	சர்வே எண்.102/3-ல் உள்ள நிலம்	சர்வே எண்.102/2D & 102/3-ல் உள்ள நிலம்	சர்வே எண்.102/2D-ல் உள்ள நிலம்
தெற்கு	16 அடி அகல ரோடு	16 அடி அகல ரோடு	16 அடி அகல ரோடு	16 அடி அகல ரோடு மற்றும் மனை எண்.7
கிழக்கு	மனை எண்.1	மனை எண்.3	மனை எண்.4	மனை எண்.5
மேற்கு	மனை எண்.3	மனை எண்.5	மனை எண்.6	சர்வே எண்.102/4A1-ல் உள்ள நிலம்
மொத்த பரப்பு	1373 சதுர அடி	990 சதுர அடி	1125 சதுர அடி	1579 சதுர அடி

மொத்த பரப்பு: 5067 சதுர அடி
தேதி : 29.11.2022
இடம்: திருத்தணி

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
கனரா வங்கி

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 15வது மாடி, பிளஸ் ஸ்ரீஜன் டெக் பார்க், பிளாட் எண் 52, பிளாக் டிஎன், செக்டர் V, சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா - 700 091. மாவட்டம் 24-பர்கனாஸ் வடக்கு.
CIN No.: U65910WB1993FLC060810
கிளை அலுவலகம்: சென்னை

L&T Financial Services

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்கண்ட சொத்தை **"இருக்கும் இடம்"** மற்றும் **"இருக்கும் நிலை"** என்ற அடிப்படையில் **"பொது மின்னணு ஏலம்"** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப்பட்ட விவரம்	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	14.10.2022 அன்று படி மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. நரேந்திரன் எம் 2. சுசந்திரா தேவி பி 3. அருணை எண்டர்பிரைசஸ்	கதவு எண். 5, பிளாட் எண். 16, 2289 சதுர அடி எஃப்எஸ்ஐ, பழைய எஸ். எண். 127, புதிய எஸ். எண். 127/11, விஜி நகர், கஸ்தூரிபாய் தெரு, பம்மல் கிராமம், பம்மல், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை – 600075. இதன் எல்லைகள் – வடக்கு – பிளாட் எண். 20 தெற்கு - 20 அடி சாலை கிழக்கு- பிளாட் எண். 17 மேற்கு – பிளாட் எண். 15	CHNHL18000286 மற்றும் CHNHL18000298	26.08.2022	Rs.8,30,672.73	Rs.1,17,84,599.3	Rs. 83,06,727.3	12/12/2022	19/12/2022 காலை 11 மணி
1. நரேந்திரன் எம் 2. சுசந்திரா தேவி பி 3. அருணை எண்டர்பிரைசஸ்	பிளாட் எண் எஃப் 1, முதல் மாடி (சாலையை நோக்கி), 991 சதுர அடி சூப்பர் பில்ட் அப் ஏரியா, ஏசிஎஸ் சக்சஸ் அவென்யூ, பிளாட் எண். 8, அழகர் சாலை 2வது தெரு, திருச்செந்தூர் நகர், ஜமீன் பல்லாவரம், சென்னை, தமிழ்நாடு - 600 117ல் 2400 சதுர அடி பரப்புள்ள சொத்து. இது பழைய எஸ். எண்கள். 161/1 மற்றும் 161/2, டவுன் சர்வே நிலப் பதிவேட்டின்படி, புதிய எஸ். எண். 161/1ஏ பகுதி, டிஎஸ். எண். 74, பிளாக் எண். 21, வார்டு எண்.சி-ல் ஜமீன் பல்லாவரம் கிராமம், ஆலந்தூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்தில் மற்றும் பல்லாவரம் துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. வடக்கு – பிளாட் எண். 9 தெற்கு – பிளாட் எண். 7 கிழக்கு - 20 அடி சாலை (அழகர் சாலை 2வது தெரு) மேற்கு – பிளாட் எண். 10 மற்றும் 11	CHNHL19000019 மற்றும் CHNHL19000050	26.08.2022	Rs. 3,31,786.8	Rs. 66,46,846.38	Rs. 33,17,868/-	12/12/2022	19/12/2022 மாலை 3 மணி

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேசி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.E-auctiontiger.net இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **"எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்" மற்றும் "எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்"** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பியளிக்கத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை **12/12/2022** அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக எல்&டி ஃபைனான்ஸினால் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்டி உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டி.டி./பி. ஓ மூலம் **19/12/2022** தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது **20/12/2022** அன்று செலுத்தப்பட்டு அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி ஹவுசிங் லிமிடெட்டுக்கு அசையா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்தை பார்வையிட அல்லது கூடுதல் தகவல்களுக்கு, ஆர்வமுள்ள ஏலதாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம். **அவரது பெயர் - திரு. விஜயராஜ் ஜே. 9551714945 முகவரி: எல்&டி பைனான்சியல் சர்வீசஸ், ஹேஜிஸ் டவர்ஸ் 5ம் மாடி, எண்.82, எதிராஜ் சாலை, (கமாண்டர்-இன்-சீஃப் ரோடு) எக்மோர், சென்னை-600008 மற்றும் அங்கிட் வீக், தொடர்பு எண். 8668343242, எல்&டி பைனான்ஸ் லிட், அலுவலகம்: 6வது மாடி, பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மெர்சிடிஸ் ஷோரூம் அருகில், சாந்தாகுருஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.** மின்-ஏலத்தின் எந்தக் கட்டத்திலும், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஏலத்தை ஏற்கலாம்/நிராகரிக்கலாம்/மாற்றலாம்/ரத்து செய்யலாம் அல்லது மின்-ஏலத்தை எந்தக் காரணமும் தெரிவிக்காமல், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ஒத்தி வைக்கலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விற்பனையை நடத்த, செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட், சர்ஃபேசி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 01.12.2022
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்

கனரா வங்கி Canara Bank

சிங்கபெருமாள் கோவில் கிளை,
கதவு எண்.5, S.O.33, கிராண்ட் சதர்ன் டிரங் சாலை,
சிங்கபெருமாள் கோவில், தமிழ்நாடு - 603 204.
Email: cb3262@canarabank.com, Ph : 044 27463600

சுவாதீன அறிவிப்பு (விதி 13 (4) அசையா சொத்துக்கு)

செக்யூரிட்டைசேஷன் மற்றும் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் ஆக்ட் 2002 (சட்டம் 54/2002) (இனி சட்டம் என அழைக்கப்படும்) மற்றும் உரிமை அமலாக்கச்சட்டம் 2002 பிரிவு 13(12) மற்றும் விதி 3-ஐ சேர்த்து படிக்கவும் இதன் படி கனரா வங்கி - ன் கீழே கையொப்பமிட்ட அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் கடன்தாரர் **திரு.நிர்மல் ராஜ்.S** அவர்களுக்கு **13.04.2022** தேதியிட்ட கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள கடன் பாக்கித் தொகையான **ரூ.28,44,378.16 (ரூபாய் இருபத்து எட்டு லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து முன்னூற்று எழுபத்து எட்டு மற்றும் பைசா பதினாறு மட்டும்)** கணக்கு எண் - 3262768000018, கேட்பு அறிவிப்பு தேதியிலிருந்து 60 தினங்களுக்குள் செலுத்தும்படி கோரப்பட்டது.

கடன்தாரர் செலுத்த வேண்டிய கடன் தொகையை முழுவதும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டுள்ள கனரா வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி தனக்குள்ள அதிகாரத்தின் மூலம் கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள சொத்துக்களை மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் விதிகள் 8 & 9 -ன் கீழ் **29.11.2022** அன்று சுவாதீனம் செய்துள்ளார் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கடன்தாரர் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் தெரிவிப்பது இந்த சொத்துக்களின் மீது எந்தவிதமான பரிவர்த்தனைகளும் வைத்து கொள்ளக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது மேலும் சொத்துக்களின் மீது ஏதாவது பரிவரத்தனை வைத்து கொண்டால் அது கனரா வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையான **ரூ.28,44,378.16** மேலும் அதற்குண்டான வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டவையாகும் என்று இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரர் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விபரங்கள்: செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை 2 துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட மறைமலைநகர் நகராட்சி வரம்பிற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, அண்ணா நகர், எண்.74, திருக்கச்சூர் கிராமத்தில் கிராம நத்தம் பழைய சர்வே எண்.592 பகுதி, பட்டா எண்.286-ன் படி புதிய சர்வே எண். 639/13-ன் படி 185 சதுர மீட்டர் அல்லது 1992 சதுர அடி நிலத்துடன் கூடிய கட்டிடம, மின்சார இணைப்புகள் உட்பட, மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : ரகு அவர்களின் மனை, அளவு - 28.8 மீட்டர், தெற்கில் : தார் சாலை, அளவு - 11.4 மீட்டர், கிழக்கில் : பாய் அவர்களின் வீடு, அளவு : 10.2 மீட்டர், மேற்கில் : காலி மனை, அளவுகள் - வடக்கு தெற்காக - 4.4 மீட்டர், தெற்கிலிருந்து கிழக்காக - 16.6 மீட்டர், கிழக்கிலிருந்து தெற்காக - 5.8 மீட்டர்.

தேதி : 29.11.2022
இடம் : சிங்கபெருமாள் கோவில்

அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி
இலாஹாபாத் அலகாபாத்

நுங்கம்பாக்கம் கிளை
எண்.9, 7வது குறுக்கு தெரு, ஏரி பகுதி, நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034. தொலைபேசி : 044-2817 1282.
மின்னஞ்சல் : nungambakkam@indianbank.co.in

கோரிக்கை அறிவிப்பு வெளியீடு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு 09.11.2022 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.

பெறுநர். (1) Ms. போலக்ஸ் டெக்னாலஜீஸ் (I) பி. லிட், (பிரைவேட் லிமிடெட் நிறுவனம் பிரதிநிதியாக இயக்குனர்கள்), எண்.96, லஷ்மண சுவாமி சாலை, K K நகர், சென்னை - 600 078. **(2) திரு. S. சத்யநாராயணன், (இயக்குனர் மற்றும் அடமானதாரர்),** த/பெ R B சுந்தரம், எண்.96, லஷ்மண சுவாமி சாலை, K K நகர், சென்னை - 600 078. **(3) திருமதி. விஜயலட்சுமி, (இயக்குனர்),** க/பெ சத்யநாராயணன், எண்.96, லஷ்மண சுவாமி சாலை, K K நகர், சென்னை - 600 078.

பொருள் : இந்தியன் வங்கி, நுங்கம்பாக்கம் கிளையில் உள்ள உங்கள் OCC கடன் கணக்கு எண்.430992380, IND GECLS கடன் கணக்கு எண்.6887513974 மற்றும் FITL கடன் கணக்கு எண்.7051071970 - சம்பந்தமாக.

நீங்கள் பெற்ற கடனுக்காக **07.11.2022** வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான **ரூ.1,09,11,248/- (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து பதினோராயிரத்து இருநூற்று நாற்பத்து எட்டு மட்டும்)** இதில் மேலும் 08.11.2022 முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை ஒத்துக்கொண்ட மேலதிக வட்டியுடன் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள்.

07.11.2022 அன்று வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.1,09,11,248/- (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது லட்சத்து பதினோராயிரத்து இருநூற்று நாற்பத்து எட்டு மட்டும்)** திரும்ப செலுத்துமாறு **08.11.2022** தேதியிட்ட மேற்குறிப்பிட்ட SARFAESI சட்டத்தின் கீழ் அறிவிப்பை பதிவுத்தபால் மூலம் வங்கி அனுப்பியது. பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது.

நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையான **ரூ.1,09,11,248/-** மேலும் 08.11.2022 முதல் மேலதிக வட்டியையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில், பிணைவைப்புச் சட்ட அமலாக்கத்தை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஈடுபெற்ற ஆஸ்தியை சுவாதீனப்படுத்தும். வங்கிக்கு உள்ள பிற பரிகார வழிமுறைக்கு பாதகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

"SARFAESI சட்டம் பிரிவு 13(8) ஷரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அட்டவணை

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :

அடமான சொத்துக்கள் : எண்.191, உத்தண்டி கிராமம், தாம்பரம் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காலி நிலத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். சர்வே எண்.2/2B பகுதியில் அடங்கியுள்ளது. இதன் மனை எண்.206, VGP கோல்டன் பீச், உத்தண்டி II-ல் 3375 சதுர அடி பரப்பளவு கொண்டு உள்ளது. எல்லைகள் - வடக்கில் : மனை எண்.207, தெற்கில் : மனை எண்.205, கிழக்கில் : ரோடு, மேற்கில் : மனை எண்.203. இந்த எல்லைகளுக்குள் 3375 சதுர அடி பரப்பளவு கொண்டு தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் நீலாங்கரை துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

தேதி : 01.12.2022
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இந்தியன் வங்கி.

Edelweiss
Ideas create, values protect

எடெல்வெய்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்.
CIN - U67100MH2007PLC174759
பதிவு அலுவலகம் : எடெல்வெய்ஸ் ஹவுஸ், ஆஃப் C.S.T. சாலை, கலினா, மும்பை-400098

பிற்சேர்க்கை-IV [விதி 8(1)] சுவாதீன அறிவிப்பு

இப்பவும், ஃபெடரல் பேங்க் மற்றும் ஸ்டேட் பேங்க் ஆஃப் திருவாங்கூர் ஆகியவற்றின் (''உண்மையில் கடனளித்தவர்கள்'' / ''பணி ஒப்பளிக்கப்பட்ட வங்கிகள்'') அதிகாரப்பூர்வ அலுவலர்/கள், பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) ன் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(12) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3 ன் படி தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தை செயலுறுத்தியும், கடன்தாரரான M/s. EMAS என்ஜினீர்ஸ் & கான்ட்ராக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் (கலைப்பலுவலில் உள்ளது) மற்றும் திருமதி வத்சலா ரங்கநாதன், திருமதி. வித்யா நாராயணமூர்த்தி (''தனிநபர் ஜாமீன்தாரர்கள்'') மற்றும் ஸ்ரீ ஹவுசிங் பிரைவேட் லிமிட்டெட், P.L. ஃபைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட் மற்றும் ப்ரீமியர் எனர்ஜி அண்ட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிட்டெட் (''பெருநிறுவன ஜாமீன்'') - ஆகியோருக்கு 2015 ஏப்ரல் 07 மற்றும் 2015 செப்டம்பர் 01 தேதிய கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பியழைத்து, அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முறையே 2015 மார்ச் 31 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ.44,27,77,776.27/- (ரூபாய். நாற்பத்து நான்கு கோடியே இருபத்து ஏழு இலட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எழுனூற்று எழுபத்து ஆறு மற்றும் பைசா இருபத்து ஏழு மட்டும்) மற்றும் 2015 செப்டம்பர் 01ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 50,99,69,124.37/- (ரூபாய். ஐம்பது கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து நூற்று இருபத்து நான்கு மற்றும் பைசா முப்பத்து ஏழு மட்டும்) மேற்கொண்டு வரும் செலவுகள், கட்டணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்த கோரினார்.

மேற்சொன்ன கடன்தாரர் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், சென்னை (''உயர் நீதிமன்றம்'') CP எண். 280/2014 ல் CA எண். 319 மற்றும் 533/2022 ல் பிறப்பித்த 2022 நவம்பர் 18 தேதிய ஆணைக்கு கட்டுப்பட்டு, கலைப்பலுவலர் இதன் கீழ் முழுமையாகவும், குறிப்பாகவும் விவரிக்கப்பட்ட ஜாமீன் சொத்துக்களை கீழ்க்கையொப்பமிட்ட நபருக்கு அமைதியான இயற்சுவாதீனம் ஒப்படைத்துள்ளார். இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர் EARC Trust SC 175 மற்றும் 192 ("EARC") ன் அறங்காவலராக செயல்படும் எடெல்வெய்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலராக, இதன் கீழ் முழுமையாகவும், குறிப்பாகவும் விவரிக்கப்பட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) - உடன் படிக்க பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8 ன் படி, தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி, 2022 ம் வருடம் நவம்பர் மாதம் 30 ம் தேதியன்று இயற்சுவாதீனம் எடுத்துள்ளார்.

குறிப்பாக கடன்தாரர், ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், இதில் குறிப்பிட்டுள்ள அசையாச்சொத்துக்களை கையாள வேண்டாமெனவும், அவ்வாறு ஏதேனும் வில்லங்கம் ஏற்படுத்தப்படுமாயின் அது, EARC - க்கு செலுத்தப்பட வேண்டிய 2022 செப்டம்பர் 15 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 277,73,00,000/- (ரூபாய். இருநூற்று எழுபத்து ஏழு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் மட்டும்) மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுக்கு கட்டுப்பட்டது.

ஜாமீன் சொத்துக்களை மீட்க உள்ள கால அவகாசம் தொடர்பாக மேற்சொன்ன சட்டம் பிரிவு 13 உட்பிரிவு (8) ன் கீழ் கடன்தாரரின் கவனம் வரவேற்கப்படுகிறது.

அசையா சொத்து விபரங்களாவன

M/s. EMAS என்ஜினீர்ஸ் & கான்ட்ராக்டர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (கலைப்பலுவலில் உள்ளது) பெயரில் உள்ள, கதவு எண். 1, புதிய கதவு எண். 53, அண்ணா நெடுஞ்சாலை, (கௌல் பஜார் பிரதான சாலை) கௌல் பஜார், சென்னை-600016 ல் உள்ள 39282 சதுர அடி பரப்பில் உள்ள இடம் மற்றும் அதனுடன் கூடிய ஷெட்கள் உள்ளிட்ட சொத்து மற்றும் அவற்றுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும்.

தேதி : 30 நவம்பர் 2022
இடம் : சென்னை, தமிழ்நாடு

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
எடெல்வெய்ஸ் அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிட்டெட்
(EARC Trust SC 175 மற்றும் 192 ன் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படுவது)

SUNDARAM HOME

பதிவு அலுவலகம்: எண்: 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை-600002.
நிறுவன அலுவலகம்: சுந்தரம் டவர்ஸ், எண் 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600014.
கிளை அலுவலகம்: எண் 64/11, 1ஆவது தளம், அழகேசன் சாலை, வேதாச்சலம் நகர், செங்கல்பட்டு-603001. தொலைபேசி: 044-2743 2929.

சுவாதீன அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(2)

சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்-இன் அதிகாரப்பூர்வ அலுவலர், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதானஉரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும், 13(2) பிரிவின் கீழ் 27.09.2022 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர் திரு. ராஜ்குமார் B, கூட்டுக் கடன்தாரர் திருமதி.திவ்யா D ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள, கடன்கணக்கு எண் CGP20200039-இன் கீழ் ரூ.5,45,268/- (ரூபாய் ஐந்து இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து இருநூற்று அறுபத்தெட்டு மட்டும்) தொகையை 01.04.2022 முதல் ஆண்டுக்கு 24% எதிர்காலவட்டி + முறைப்படியான செலவுகள் + சட்டச் செலவுகள் + இடைநிகழ் செலவுகள் உட்பட அனைத்தையும் அவ்வறிவிப்பு வெளியிடப்பட்ட நாளான 27.09.2022-இலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர், கூட்டுக்-கடன்தாரர் அத்தொகையை செலுத்தத் தவறியபடியால் கடன்தாரருக்கும் கூட்டுக் கடன்தாரருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் மேற்கூறிய விதிகளில் விதி 8-இன் கீழ் தமக்குள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை 30.11.2022 அன்று தனது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்.

கடனீட்டுச் சொத்துக்களை மீட்பதற்கான காலஅவகாசம் தொடர்பானதில் மேற்கண்டசட்டத்தின் பிரிவு 13 துணைப் பிரிவு (8)-ன் விதிகளைக் கவனிக்கும்படி கடன்தாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

எனவே கடன்தாரருக்கும் கூட்டுக்-கடன்தாரருக்கும் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது 30.11.2022 நாள்படி ரூ.5,84,819/- (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து எண்ணூற்று பத்தொன்பது மட்டும்) தொகையை ஆண்டுக்கு 24% வட்டி + முறைப்படியான செலவுகள் + சட்டச் செலவுகள் + இடைநிகழ் செலவுகள் ஆகியவற்றுடன் சேர்த்து சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெடுக்குச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

சொத்து அட்டவணை: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய வீடு மற்றும் மனை இடம். மனை எண் 18, பரப்பளவு 1569 சதுர அடி, சர்வே எண் 22/1, யோகாலயா அவென்யூ, DTCP எண் 28/2017. அமைவிடம் - எண் 163, சோழந்தாங்கல் கிராமம், மதுராந்தகம் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: 30 அடிச் சாலை, தெற்கு: மனை எண்கள் 34 & 35, கிழக்கு: மனை எண் 19, மேற்கு: மனை எண் 7. நேர்கோட்டு அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 32 அடி 9 அங்குலம், கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 30 அடி, வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 50 அடி, வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 50 அடி. இது செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் மதுராந்தகம் சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. இது உரிமை ஆவண எண் 3911/2019-இல் முழுமையாகவும் குறிப்பாகவும் விவரிக்கப்பட்டது.

நாள்: 30.11.2022

சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்-க்காக
அதிகாரப்பூர்வ அலுவலர்